4. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து ஏற்கனவே எழுதியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியாகிவிட்டது. அனுமதி மறுத்ததை நீங்கள் என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும். (குறுக்கீடு) இல்லை. அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும். நான் உங்களுக்கு எழுதியிருப்பதை என்னுடைய அறையிலே வந்துதான் கேட்கவேண்டும்; உட்காருங்கள் (குறுக்கீடு) இப்போது எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. திரு. விசுவநாதன், உட்காருங்கள். மாற்றுத் தலைவர்கள் பட்டியல் (குறுக்கீடு).

திரு. ச. அழகிரி : பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி மறுத்ததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது முறையாக இல்லையென்று சொன்னால் நான் அனுமதி மறுக்கிற அதிகாரத்தை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இல்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி மறுக்கலாம் என்று கேட்பதெல்லாம் முறையில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், நான் உங்களுக்கும் அனுமதி மறுத்து கடிதம் எழுதியிருக்கிறேன். உங்களுக்கு நான் அனுமதி மறுத்து எழுதியதற்குப் பிறகு இதை எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உங்களுக்கு அனுமதி மறுத்து எழுதியிருக்கிறேன். உட்காருங்கள், (குறுக்கீடுகள்).

5. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)ன்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 7-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன் :

1994 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

திரு. வி. கே. சின்னசாமி

திரு. கே. முனிவெங்கடப்பன்

செல்வி எல். சுலோசனா

திருமதி ஜீனத் சர்புதீன்

திரு. வே. தம்புசாமி

திரு. எஸ். வி. சண்முகம்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்தும் அவையில் தற்போது நடைபெற்ற நிகழ்வுகள் குறித்தும் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி.

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். மறுத்ததைப் பற்றி என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பினைப் பேரவைக்கு வெளியிட வேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி வழங்கியிருக்கிறேன். இப்போது அந்த அறிவிப்பினைப் பேரவையில் அவர்கள் வைப்பார்கள். (குறுக்கீடு) திரு. அழகிரி, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதையெல்லாம் பொது விவாதத்திலே பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜீரோ ஹவரில் நான் அனுமதித்தால் தான் பேச முடியும். நான் அனுமதிக்கவில்லை ன்கிறபொழுது அதை எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதிக்காதபோது எழுபப முடியாது. நான் அனுமதிக்கவில்லை. பொது விவாதம் நடைபெற

அ ** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க கற்றப்பெற்றது.